SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

009

**THIRD YEAR EXAMINATIONS IN BACHILOR OF COMMERCE (EXTERNAL)-2011/2012**
HELD IN NOVEMBER / DECEMBER-2013

## COM 37 (II) – வரியியல்

**பரீட்சாத்திகளுக்கான அறிவுறுத்தல்**

- எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்குக.
- சகல செயன்முறைகளையும் வழங்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமான விடைகளை புதிய பக்கத்தில் ஆரம்பிக்குக.
- அனைத்து எடுகோள்களையும் சரியாக காட்டுக.

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

**வினா- 01**

யுனைடட் ட்ரேடிங் கம்பனி புடவை ஏற்றுமதி வணிகத்தில் ஈடுபட்டு வருகின்றது. ஐரோப்பிய யூனியனில் கடந்த சில வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்ட GSP யினால் கம்பனி நிதிப்பிரச்சினையை எதிர்கொண்டது. கம்பனியின் பிரதான பங்காளர்கள் தமது 75% பங்கினை பிறருக்கு விற்றனர். உரிமையில் ஏற்பட்ட மாற்றத்தின் பின்னர் கம்பனி பழைய அனுமதிப்பத்திரத்தில் (license) வியாபாரத்தை ஆரம்பித்தது.

**கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் வருமாறு**

**31.12.2012 இல் நிதிநிலைமைக் கூற்று(Balance Sheet)** ரூபா "000"

| | | |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | | 90,000 |
| முதலீடு | | 5,000 |
| | | 95,000 |
| **நடைமுறைச் சொத்து** | | |
| தொக்கு | | 52,000 |
| வியாபார கடன்பட்டோர் | | 39,000 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | | 5,500 |
| மொத்தம் | | 191,500 |
| **நிதியீட்டம்** | | |
| உரிமை மூலதனம் | | 300,000 |
| ஒதுக்கம் | (250,000) | |
| இலாப/நட்டம் மீ/வ | 150,000 | (100,000) |
| வருட இலாபம் | | 200000 |
| **நடைமுறையல்லா பொறுப்பு** | | |
| நீண்டகால கடன் | | 30,000 |
| **நடைமுறைப் பொறுப்பு** | | |
| வியாபார சென்மதிகள் | | 37,500 |
| அட்டுறுக்கள் | | 22,500 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு (Provision for gratuity) | | 22,500 |
| மொத்தம் | | 312,500 |

31.03.2012ல் முடிவுற்ற வருடத்திற்கான இலாப நட்டக்கூற்று

| | ரூபா "000" |
|---|---|
| வருமானம் - உற்பத்தி | 258,000 |
| சேவைகள் | 12,150 |
| | 270,150 |
| மொத்த இலாபம் | 550,000 |
| கூட்டு : திறைசேரி உண்டியலின் வட்டி வருமானம் (தேறியது) | 25,000 |
| கழி : நிர்வாகச் செலவுகள் | (12,500) |
| விற்பனைச் செலவுகள் | (247,000) |
| நிதி மற்றும் ஏனைய செலவுகள் | (53,000) |
| வருமான வரிக்கு முந்திய இலாபம் | 150,000 |

**வேறு தகவல்கள்**

விற்பனை விநியோகச் செலவு பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.

| | ரூபா "000" |
|---|---|
| விளம்பரம் | 25,000 |
| வாடகை | 27,000 |
| கழியாட்டச் செலவு | 5,000 |
| போக்குவரத்து | 15,000 |
| தரகுக்கட்டணம் | 10,000 |
| வெளிநாட்டுப் பிரயாணம் | 125,000 |
| ஐயக்கடன் ஏற்பாடு | 25,000 |
| இறைக்கட்டணம் | 15,000 |

**நிருவாகச் செலவு பின்வருவற்றை உள்ளடக்கியுள்ளது.**

| | |
|---|---|
| தேய்மானம் | 45,000 |
| Paye வரியின் பிந்திய கொடுப்பனவுக்கான அபராதம் | 500 |
| ஊழியர் நலன் | 40,000 |
| நன்கொடை | 12,500 |
| வியாபாரச் சங்கத்திற்கான சந்தா | 5,400 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 13,600 |
| | 117,000 |

ரூபா 300,000 பெறுமதியான தேய்மானமானது இந்த ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்தின் மீதானதாகும்.

நிதிச் செலவு பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது

| | ரூபா "000" |
|---|---|
| <u>நிதி மற்றும் ஏனைய செலவுகள்</u> | |
| உபகரண விற்பனை நட்டம் | 1,500 |
| காப்புறுதி | 15,000 |
| வட்டி | 22,000 |

**பின்வரும் மேலதிகத் தகவல்கள் உமக்கு வழங்கப்பட்டுள்ளது.**

- கம்பனியானது 01.04.2011ல் தனது வியாபாரத்தினை ஆரம்பித்ததுடன் இது மேலதிகமான பொறி சேவை நிலையத்தினை 01.07.2011ல் ஆரம்பித்தது.
- கம்பனி தனது முகாமை இயக்குனருக்கு சொந்தமான நிலத்தில் சேவை பொறியினை நிறுவுவதற்கான கட்டடத்தை கட்டியது. கட்டட நிர்மானச் செலவு ரூபா 10மில்லியன் மூலதனப்படுத்தப்பட்டுள்ளது.
- ஒப்பந்தத்திற்கு ஏற்ப 01.07.2011 லிருந்து கம்பனி, முகாமை இயக்குனருடைய நிலத்திற்காக ரூபா 6 மில்லியனை ஒட்டு மொத்த தொகையாக(lump sum payment ) வழங்கியதுடன் மாதாந்த வாடகையாக ரூபா 750,00 தினையும் வழங்குகிறது.
- இறைவரி ஒப்பந்தத்திற்கு ஏற்ப கம்பனி, தனது விற்பனையில் 5% ஐ காப்புரிமை( Patent Right) யாக பிரபல புடவை கம்பனிக்கு வழங்க வேண்டும். வரி ஒப்பந்தத்திற்கு ஏற்ப கம்பனி 10% வரி கழிக்கப்பட்ட பிறகு 15 மில்லியனை இறைவரியாக செலுத்தியது.
- ஐயக்கடன் ஏற்பாடானது வாடிக்கையாளர் மீதியின் மீதான பொதுவான ஏற்பாட்டை குறிக்கின்றது.
- கம்பனி கொழும்பு மாநகர சபைக்கு ரூபா 12 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனமொன்றை குப்பை அகற்றுவதற்காக நன்கொடையாக வழங்கியுள்ளது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட கருணை இல்லத்திற்கு ரூபா 75,000 ஐ வழங்கியுள்ளது.
- ரூபா 520,000 பெறுமதியான 2008/9ல் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணமானது ரூபா 265,000 ற்கு இவ்வருடத்தில் விற்பனை செய்யப்பட்டது. உபகரணத்தின் தேறிய பெறுமதி ரூபா 175,000
- இவ்வருடத்தில் கம்பனி ரூபா 850,000 பெறுமதியான தளபாடத்தினை கொள்வனவு செய்தது.
- கம்பனி பொறியினை நிறுவுவதற்கு ஜேர்மனியிலிருந்து நிபுணத்துவ சேவையினை பெற்றதுடன நிபுனர் ஜேர்மனி செல்வதற்கு விமான டிக்கட் வழங்கியது. இதன் கிரயம் ரூபா 500,000. இது வெளிநாட்டு பிரயான செலவுக்கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**2011/2012ல் வரி மதிப்பாண்டில் கம்பனியினால் செலுத்தப்பட்ட வரியினை மதிப்பிடுக.**

(புள்ளிகள் - 45)

**வினா – 02**

திரு குமார் சிரேஷ்ட நிருவாக அலுவலகராக அரச வங்கியில் பணிபுரிந்து 01.07.2009ல் ஓய்வு பெற்றார். மேலும், இவர் ஓய்வூதியத்தின் பின்னர் மாதாந்த ஓய்வூதிய தொகையை பெறுகின்றார். ஓய்வூதியத்தின் பின்னர் திரு குமார் தனியார் கம்பனியொன்றில் நிறைவேற்று அதிகாரியாக ரூபா100,000 மாதாந்த சம்பளத்திற்கு இணைந்ததுடன் இவருக்கு மேலதிகமாக 25000 cc ற்கு அதிகமாக இன்ஜின் கொள்ளவுடன் மோட்டார் காரும் வழங்கப்பட்டது. திருமதி குமாரவுக்கு கம்பனியின் வீடு ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ரூபா 100,000 வருடாந்த வாடகை கம்பனியினால் வீட்டு உரிமையாளருக்கு வழங்கப்படுகின்றது. இந்த வீட்டிற்கான சோலை வரி மதிப்பீடு ரூபா 120,000 (வரி 30%). திரு. குமார் ரூபா 8000ஐ கம்பனிக்கு வாடகையாக செலுத்துகின்றான். இந்த உபகார (benefit) பெறுமதியானது உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYEE) கணிப்பீட்டுக்கு எடுத்துக்கொள்கிறது. கம்பனியினால் ரூபா 270,000 ஆனது Payee வரியாக கழிக்கப்பட்டு செலுத்தப்பட்டது.

திரு. குமார் சம்பளத்திலிருந்து 8% ஐ ஊழிய சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்றார். தொழில் தருனர் பங்களிப்பு 12% இவ்வருடத்தில் கம்பனியினால் ரூபா 50இ000 பெறுமதியான உணவுச் செலவும் (வணிக நோக்கத்திற்காக) ஒரு பயணத்திற்கு ரூபா 1500 வீதம் தங்குமிடச்செலவு ஈடு செய்யப்பட்டது. அவர் கடந்த வருடத்தில் 35 உத்தியோகப்பூர்வ பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

மேலும், இந்த வருடத்திற்காக கம்பனியியானது பின்வரும் மருத்துவச் செலவினையும் ஈடு செய்யது (Reimbursed)

| | திரு. குமார | திருமதி குமார | அவரின் தாய்(90 வயது) |
|---|---|---|---|
| புறநோயாளி (ரூபா) | 12,000 | 75,000 | 7,500 |
| வோட் கட்டணங்கள் (ரூபா) | 42,000 | 10,000 | 15,000 |

வெளி வர்த்தக மற்றும் வணிக அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தரமான ஏற்றுமதிப் பொருளுக்கான சர்வதேச விருதினை வெற்றி கொள்வதற்காக திரு. குமார் பங்களிப்புச் செய்ததற்காக ரூபா 150,000 பெறுமதியான வெகுமானம் ஒக்டோபர் 2011ன் கம்பனியினால் அவருக்கு வழங்கப்பட்டது.

அவருடைய முந்திய தொழில் தொடர்பான மேலதிகத் தகவல்கள் பின்வருமாறு உமக்கு வழங்கப்பட்டுள்ளது.

| | (ரூபா) |
|---|---|
| அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட மாதாந்த ஊதியம் | 48,000 |
| மாதாந்த ஓய்வூதியம் | 44,000 |
| ஓய்வூதியத்தின் போது பெற்ற ஒட்டு மொத்த தொகை(lump sum) | 370,000 |

குமார் தனது 2000 சதுரயடி நிலப்பரப்பில் முதலாவது வீட்டினை நிர்மானித்ததுடன் இதற்காக ஜுலை 2009ல் வீட்டு அதிகார சபையிலிருந்து வீட்டுக்கடனைப் பெற்றார். அவர் ரூபா 150,000 ஐ கடன்வட்டியாகவும், ரூபா 350,000ஐ மூலதன மீள் கொடுப்பனவாகவும் (Capital repayment) செலுத்துகின்றான். வீட்டின் சோலை வரி மதிப்பீடு ரூபா 75,000 (சோலைவரி 30%). திரு குமார் தனது வீட்டினை மாதாந்தம் ரூபா 35,000 வாடகைக்கு விட்டுள்ளார். திரு குமார் கொழும்பு 5ல் அமைந்துள்ள மற்றொரு வீட்டினை மார்ச் 2010ல் ரூபா 5மில்லியனுக்கு கொள்வனவு செய்தார். இதனை கொழும்பு மாநகர சபை ரூபா 80,000 வாக மதிப்பிட்டுள்ளது (வரி 30%) இந்த வீடு 01.06.2011லிருந்து வெளிநாட்டு தூதரகத்தில் வேலை செய்யும் நபரொருவருக்கு ரூபா 55,000 மாதாந்த வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

திரு குமார் உள்நாட்டு அடகுக்கம்பனியொன்றில் போதியளவு பணத்தை(Sum of Money) வைப்புச் செய்தார். இந்தக் கம்பனியின் முகாமையாளர் முதலீட்டாளர்களின் பணத்தினை கொள்ளையடித்து 01.01.2011ல் நாட்டை விட்டு வெளியேறினார்.

திரு. குமாரவின் முதலீடு தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| முதலீட்டுத் தொகை(ரூபா) | காலம் | வருட வட்டி | வட்டி செலுத்தும் முறை |
|---|---|---|---|
| 1500,000 | 01.10.2010-31.12.2012 | 28% | மாதாந்தம் |
| 700,000 | 01.01.2011 | 25% | காலாண்டுக்கு |
| 500,000 | 01.04.2011-1.1.2012 | 30% | முதிர்வில் |

திரு. குமார் பின்வருவனவற்றை கழிப்பனவுக்காக (Deduction) கோரியிருந்தார்.

- அனுமதிக்கப்பட்ட கருணை இல்லத்திற்கு ரூபா 25,000 நன்கொடை
- J.R. BMICH நிலையத்திற்கு ரூபா 200,000 புத்தகப் பெறுமதியான நன்கொடை
- டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கான கொழும்பு பொதுச் சுகாதார நிலையத்திற்கு ரூபா 600,000 பெறுமதியான உபகரணம் நன்கொடை.

2011/2012ம் ஆண்டிற்காக திரு குமாரவினால் செலுத்த வேண்டிய வருமான வரியினை கணிப்பீடுக.

(புள்ளிகள் - 35)

வினா - 3

திரு. கெலும் (Kelum) என்பவர் அவருடைய நண்பரான திருமதி சில்வாவுடன் ஐக்கிய அமெரிக்கா சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்கான புடவை உற்பத்தி தொழிலில் பங்குடமை வியாபாரத்தினை 01.04.2011ல் தொடங்கினார்.

பங்குடமையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| ஆண்டிற்காக பிரிக்கப்பட்ட இலாபம் (Divisible Profit) (வரிக்கு செம்மையாக்கப்பட்டுள்ளது) | | 4,200,000 |
| செலுத்தப்பட்ட மாதாந்தச் சம்பளம் | கெலும் | 50,000 |
| | சில்வா | 40,000 |
| செலுத்தப்பட்ட பங்காளர் மூலதனத்திற்கான மாதாந்த வட்டி | கெலும் | 6,000 |
| | சில்வா | 6,000 |

பிரிக்கப்பட்ட இலாபம் (Divisible Profit) பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.

- நிலையான சொத்தினை விற்றதிலிருந்து ஏற்பட்ட ரூபா 40,000 பெறுமதியான வியாபார நட்டம்.
- ஐக்கிய அமெரிக்காவில் புடவைத்தொழிலுக்காக ஏற்பட்ட ரூபா 520,000 பெறுமதியான விளம்பரச் செலவு.
- சுயமதிப்பீட்டின் அடிப்படையில் பங்குடமை வரிக் கொடுப்பனவு ரூபா 150,000.
- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சட்டத்திற்கமைவாக 2011/2012 ஆம் ஆண்டிற்காக கணிப்பிடப்பட்ட பெறுமதித் தேய்வுத் தள்ளுபடி ரூபா 200,000 மானது சீர்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்ட இலாபத்தில் (Adjusted Divisible Profit) உள்ளடங்கவில்லை.
- பங்களார்களுக்கான இலாபப்பகீர்வு வீதம 50:50

2011/2012 ஆம் ஆண்டிற்கான திரு Kelum உடைய மொத்த சட்ட வருமானத்தினை கணிக்குக.

(புள்ளிகள் - 20)